**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.204/2025**

**நாள் :24.02.2026**

**ம.சா.** 2 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.கோபிநாத் | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.குமரேசன் | வயது | : | 43 |
| ஊர் | : | கிருஷ்ணாபுரம் | தொழில் | : | எலக்ட்ரிக் வேலை |
| வட்டம் | : | ஆம்பூர் | தேசியம் | : | இந்தியன் |

நான் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பு 2வது சாட்சி ஆவேன். இந்த விபத்தை நேரடியாக பார்த்தவர் என்ற முறையில் எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

**2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஆம்பூர் நகரத்தில் எஸ். கே ரோடில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் எலக்டிரிசியன் வேலை செய்து வருகிறேன். அதற்கு லைசென்ஸ் பெறவில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன நேரு என்பவரை பிரபாகரன் என்பவர் மூலமாக தெரியும். மேற்படி பிரபாகரன் நேரு நடத்தி வந்த எஞ்சினியரிங் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்தில் பணிபுரிந்தவர் ஆவார். இறந்துபோன நேருவின் வருமானம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன நேரு என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா? இல்லையா என்பது பற்றி எனக்கு தெரியாது. நான் விபத்து சமயத்தில் ஆம்பூரை

நோக்கி வந்துகொண்டிருந்தேன் என்றால் சரிதான். எதிரில் வந்த லாரி மோதிதான் விபத்து ஏற்பட்டதாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நேருவுக்கு பின்னால் 50 அடி தூரத்தில் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தேன். எனது இருசக்கர வாகனத்தின் பதிவு எண் இல்லை. அந்த வாகனம் புதிதாக வாங்கியதாகும். அதேபோல் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட விபத்து நடப்பதற்கு முன்பே சிறிது தூரம் தள்ளி மற்றொரு விபத்து ஏற்கனவே ஏற்பட்டிருந்தது என்றால் சரிதான். அதவாது இருசக்கர வாகனமும், லாரியும் மோதியதில் விபத்து ஏற்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த நிலையில்தான் இந்த விபத்தும் ஏற்பட்டது என்றால் சரிதான். முந்தைய விபத்திற்கும் பின்னால் நடந்த விபத்திற்கும் 10 நிமிடம் கால அவகாசம் இருந்ததாக சாட்சி கூறுகிறார். ஏற்கனவே விபத்து ஏற்பட்டிருந்த நிலையில் நேரு மிதமான வேகத்தில் வாகனத்தை இயக்கி பிரேக் போட்டிருந்தால் இந்த விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல. சாட்சி பின்னிட்டு ஆமாம் என்று கூறுகிறார். லாரி சாதாரண வேகத்தில் வந்து ஏற்கனவே விபத்து ஏற்பட்டு நின்றுகொண்டிருந்த நிலையில் நேருதான் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து லாரிமீது மோதிவிட்டார் என்றால் சரியல்ல. லாரி இயக்க நிலையில்தான் இருந்தது. லாரி நின்றுக்கொண்டிருக்கவில்லை என்று சாட்சி கூறுகிறார். அத்துடன் முந்தைய விபத்தை ஏற்படுத்திவிட்டு தொடர்ச்சியாக வந்து இரண்டாவது விபத்தையும் ஏற்படுத்தியதாக சாட்சி கூறுகிறார். நான் விபத்தை நேரடியாக பார்த்த நிலையில் விபத்து சம்பந்தமாக புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. அதேபோல் விபத்தில் இறந்துபோனவர் எனக்கு தெரிந்தவர் என்றால் சரிதான். அந்த நிலையில் காவல் நிலையத்தில் புகார் கொடுததேனா என்றால் இல்லை. விபத்தானது நேருவின் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றால் இல்லை. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. பிரபாகரன் என் நண்பர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க இறந்துபோனவரின்

குடும்பத்திற்கு இழப்பீடு பெறும் நோக்கில் ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.